www.StudyGuideIndia.com

**8008**

Register Number | | | | | | |

# தமிழ் - இரண்டாம் தாள்

# Language – Part A – TAMIL – Paper II

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : i) கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.

ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

iii) கட்டுரைகள் முன்னுரை, பொருளுரை மற்றும் முடிவுரைகளைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

I. எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் விடை தருக : 5 × 1 = 5

1. பாரதிதாசன் பாண்டியன் பரிசை இயற்றினார்.
   – செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக.
2. முழுநிலவு மிகவும் அழகாக இருக்கிறது.
   – உணர்ச்சி வாக்கியமாக மாற்றுக.
3. தமிழின் இனிமையை அனைவரும் அறிவர்.
   – வினா வாக்கியமாக மாற்றுக.
4. திருவள்ளுவரைப் போற்றாதவர் இலர்.
   – உடன்பாட்டு வாக்கியமாக மாற்றுக.
5. மாதவி நடனம் கற்பித்தாள்.
   – தன்வினை வாக்கியமாக மாற்றுக.
6. கந்தன் கடுமையாக உழைத்தான்; அதனால் பொருள் ஈட்டினான்.
   – கலவை வாக்கியமாக மாற்றுக.
7. ஆசிரியர், "நீங்கள் நாட்டுப்பற்றுடன் வளர வேண்டும்" என்று மாணவர்களிடம் கூறினார்.
   – அயற்கூற்று வாக்கியமாக மாற்றுக.

[ Turn over

II. கீழ்க்காணும் வினாக்கள் **அனைத்திற்கும்** விடையளிக்கவும். 5 × 1 = 5

8. ஏதேனும் *ஒன்றனுக்கு* மட்டும் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

அ) தாயைக் கண்ட சேயைப் போல

ஆ) வாழையடி வாழையாய்

இ) கண் துடைப்பு.

9. வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக :

பனை இலையால் கூரை போட்டனர்.

10. மரபுப்பிழை நீக்கி எழுதுக :

யானை அலறியதும் குதிரை கத்தியது.

11. பிறமொழிச் சொற்களை நீக்கி ஏற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக :

என் தந்தை குமாஸ்தாவாகப் பணியாற்றுகிறார்.

12. ஏற்ற இடங்களில் நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக :

இளமையில் கல் என்பது ஔவையின் அமுதமொழி

III. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக : 3 × 2 = 6

13. பகுபத உறுப்பிலக்கணம் தருக : ( ஒன்றனுக்கு மட்டும் )

அ) வீழ்வார் ஆ) உயர்ந்த

14. பிரித்து எழுதுக :

அ) செம்மொழி ஆ) அறிவிலார்.

15. இன்றியமையாத இலக்கணக் குறிப்பு தருக : ( இரண்டனுக்கு மட்டும் )

அ) வாழ்க

ஆ) பெருந்தகை

இ) செடிகொடிகள்.

www.StudyGuideIndia.com

IV. கீழ்க்காணும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து எழுதுக : 20 × 1 = 20

16. மெய்யெழுத்துகளுக்குரிய மாத்திரை

அ) கால் ஆ) அரை

இ) ஒன்று ஈ) இரண்டு.

17. தொடர்மொழிக்கு எடுத்துக்காட்டு

அ) மரம் ஆ) எட்டு

இ) நிலங்கடந்தான் ஈ) மனிதன்.

18. குற்றியலுகரம் .................... வகைப்படும்.

அ) ஐந்து ஆ) மூன்று

இ) ஆறு ஈ) நான்கு.

19. நிகழ்கால வினையெச்ச வாய்பாடு

அ) செய்து ஆ) செய

இ) செயின் ஈ) பாக்கு.

20. தெரிநிலை வினைமுற்றுக்கு எடுத்துக்காட்டு

அ) நடந்தான் ஆ) நடந்த

இ) நடந்து ஈ) நடவா.

21. சொல்லானது .................... வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று

இ) நான்கு ஈ) ஆறு.

22. இலக்கண முறைப்படி பேசுதலும் எழுதுதலும் .................... நிலையாகும்.

23. பிரிக்க முடியாத இரட்டைச் சொற்களாக வருவது

அ) அடுக்குத் தொடர் ஆ) வெளிப்படைச் சொல்

இ) ஒருபொருட் பன்மொழி ஈ) இரட்டைக்கிளவி.

24. புறத்திணை .................... வகைப்படும்.

அ) ஐந்து ஆ) ஏழு

இ) பத்து ஈ) பனிரெண்டு.

www.StudyGuideIndia.com

25. முல்லைக்குரிய தெய்வம்

அ) முருகன் ஆ) திருமால்

இ) வருணன் ஈ) கொற்றவை.

26. தென்மேற்கு எனப்படுவது .................... எனப் பிரியும்.

அ) தென் + மேற்கு

ஆ) தெற்கு + மேற்கு

இ) தெற் + மேற்கு.

27. ஒரு பாலை விலக்கி, ஒரு பாலைச் சுட்டுவது .................... சொல்லாகும்.

28. நிரையசையின் வாய்பாடு

அ) நாள் ஆ) மலர்

இ) காசு ஈ) பிறப்பு.

29. 'கோப்பெருந்தேவி வந்தது' - என்பது

அ) திணைவழு ஆ) இடவழு

இ) காலவழு ஈ) பால்வழு.

30. வினா .................... வகைப்படும்.

31. ஒரு சொல் இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வருவது .................... ஆகும்.

32. ஐந்தடி முதல் 12 அடிகள் வரை பெற்று வரும் வெண்பா .................... .

33. பொருத்துக :

அ) நிரை கவர்தல் — கரந்தை

ஆ) எயில் காத்தல் — வெட்சி

— நொச்சி.

34. நம் இலக்கியங்களுக்குப் பாடுபொருளாக அமைவன .................... புறப்பொருளுமாகும்.

35. புணர்ச்சி .................... வகைப்படும்.

www.StudyGuideIndia.com

V. அ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ***ஆறனுக்கு*** மட்டும் விடையளி : $6 \times 2 = 12$

36. சார்பெழுத்துக்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

37. வியங்கோள் வினைமுற்றுகள் எவ்வெப் பொருளில் வரும் ? எடுத்துக்காட்டுகள் தருக.

38. பொதுமொழியை சான்றுடன் விளக்குக.

39. இறந்தகால வினையெச்ச வாய்பாடுகள் யாவை ?

40. மரபு வழுவமைதியை சான்றுடன் விளக்குக.

41. அடுக்குத்தொடர் என்றால் என்ன ? சான்றுடன் விளக்குக.

42. உயிரளபெடை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

43. விடை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

ஆ) பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***ஆறனுக்கு*** மட்டும் விடையளி : $6 \times 2 = 12$

44. 'பைங்கூழ்' எவ்வாறு புணர்ந்தது ?

45. குறிஞ்சிக்குரிய சிறுபொழுது, பெரும் பொழுதுகளை எழுது.

46. பொதுவியல் திணையை விளக்குக.

47. நேரிசை ஆசிரியப்பாவின் இலக்கணம் தருக.

48. "உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்." - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டுக.

49. தற்குறிப்பேற்ற அணி

*அல்லது*

செம்மொழிச் சிலேடை அணியை விளக்குக.

50. கீழ்க்காணும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக.

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.



www.StudyGuideIndia.com

VI. 51. கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக : 5 × 2 = 10

எளியநடையில் தமிழ்நூல்கள் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிதுபுதி தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.

*வினாக்கள் :*

அ) தமிழ் நூல்களை எவ்வாறு எழுத வேண்டும் ?

ஆ) புதிதாக இயற்ற வேண்டியதெனக் கவிஞர் எதனைக் குறிப்பிடுகிறார் ?

இ) எவற்றிற்குப் புதிய பெயர்கள் காண வேண்டுமெனக் கவிஞர் சுட்டிக் காட்டுகிறார் ?

ஈ) எதற்காக எல்லோரும் நாண வேண்டும் ?

உ) பாடலுக்கேற்ற தலைப்பு ஒன்று தருக.

VII. 52. நீவிர் வாழும் பகுதியில் மின்விளக்கு வசதி அமைத்துத் தர ஊராட்சி ஒன்றியத் தலைவருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக. 1 × 10 = 10

*அல்லது*

நீ கண்டுகளித்த அறிவியல் கண்காட்சி குறித்து நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

www.StudyGuideIndia.com

VIII. 53. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்று** குறித்து ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : 1 × 10 = 10

அ) காலத்தை வெல்லும் கணினி

ஆ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு

இ) நீ விரும்பும் கவிஞர்.

IX. 54. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்றனுக்கு** மட்டும் ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : 1 × 10 = 10

அ) பசுவின் செயலும் கதை உணர்த்தும் நீதியும்

ஆ) 'பெத்தமனம் பித்து பிள்ளை மனம் கல்லு' என்ற இப்பழமொழியை இக்கதை கொண்டு ஆய்க.

இ) அப்பாவு கணக்கில் 35 ரூபாய்.

ஈ) மண்ணாசை - பெயர்ப் பொருத்தத்தை ஆய்க.

www.StudyGuideIndia.com

www.StudyGuideIndia.com